
வேதாத்திரியப்
பார்வையில்
பாரதியாரின்
தத்துவப்
பாடல்கள்
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

## வேதாத்திரியப் பார்வையில்

# பாரதியாரின் தத்துவ பாடல்கள்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1. கண்ணன் பாட்டில் தத்துவம்
2. குயில் பாட்டில் தத்துவம்.
3. பாஞ்சாலி சபதத்தில் தத்துவம்.
4. வெட்டவெளி தத்துவம்
5. ஞாலம் உயிர்கள் அனைத்து மவன்.
6. நானும் ஓர் கனவோ?
7. செய்க தவம்! செய்க தவம்!
8. மனிதனின் சரித்திரம்
9. மனமெனும் பெண்ணே!
10. நான் வீழ்வே னென்று நினைத்தாயோ

## 1. கண்ணன் பாட்டில் தத்துவம்

பாரதியார் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட விழைந்தவர். தோத்திரப் பாடல்களில் தனது பக்தியை அழுத்தமாகப் பதிவு செய்தவர்.

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலிச் சபதம் என்பனவற்றில் இறைத் தத்துவத்தின நெறியினைப் படைத்துள்ளார்.

கண்ணன் பாட்டு உயிருக்கும் இறைவனுக்கு இடையே உள்ள இணையற்ற உறவினை விளக்கும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது.

பாரதியின் கண்ணன் பாட்டு, தற்கால மனிதனின் அகப்புறப் போராட்டத்திற்கும், மெய்ப் பொருளை மறந்து வெறும் தத்துவங்களையே எண்ணிக் குழம்பும் அறிவு நோயாளருக்கும் – ஓர் அரும் மருந்து ஆகும்” என்று தேவசங்கீதம் குறிப்பிடுகின்றது.

அத்வைதத் தத்துவமே பாரதியின் கண்ணன் பாடல்களுக்கு அடிப்படையாக அமைந்தது.

இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளாகிய அத்வைதம், விசிட்டாத்வைதம் முதலான தத்துவங்கள் அனைத்தும் ஒரே தத்துவத்தினின்று எழுந்தவைகள்தாம்.

இறைவனைப் பல்வேறு நிலைகளில் அனுபவித்தலால், இவை தனித்தனி அனுபவங்களைச் சித்தரிக்கின்றன.

விசிட்டாத்வைதப்படி இவ்வுலகம் பிரம்மத்தின் படைப்பாகும். பாரதியும் விசிட்டாத்வைதக் கொள்கையை ஏற்பவர் என்பதனை அறியலாம்.

கண்ணனைத் தோழன், தாய், தந்தை, சேவகன், .அரசன், சீடன் , சற்குரு, காதலன், காதலி ஆகிய அனைத்துமாகக் கண்டார். பாரதியின் படி, கண்ணனே எல்லாம். அவர் பர பிரம்மம்.

பரமாத்மாவின் கல்யாண குணங்களைப் பிரித்து நின்று சுவைப்பதில் ஆர்வங் கொண்டவர்கள் ஆழ்வார்கள்.

ஆனால், பாரதியோ இரண்டறக் கலத்தல் என்று அனுபவத்தையே மிகுதியாகப் பாடுகிறார்.

இந்த ஜீவன் வேறு - பரமாத்மா வேறு என்றில்லாமல் இரண்டும் இயல்பான, இரண்டும் ஒன்றே என்னும் கருத்தில் பாரதியார்.

”அன்னிய மாக நம்முள் எண்ணுவ தில்லை – இரண்
டாவியுமொன் றாகுமெனக் கொண்ட தில்லையோ?” (பாரதி.பா.)

என்னைப் புறமெனவுங் கருதுவதோ? கண்கள்
இரண்டனில் ஒன்றை யொன்று கண்டு வெள்குமோ?”

”என்னைப் புறமெனவுங் கருதுவதோ? என்னும் கேள்வி வாயிலாக இருவரின் ஆன்மாவும் ஒன்று என்பதை உணர்த்தி, அதனைத் தன்னிலிருந்து பிரித்து வேறாகக் காண்பதற்கு காரணமாக அமைந்து அவனது அகத்தை நீக்குகிறான்.

"நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்?
நீலவிசும் பினிடை என்ன கண்டிட்டாய்?
திரித்த துரையினிடை என்ன கண்டிட்டாய்?
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்?
பிரித்து பிரித்து நிதம் மேகம் அளந்தே
பெற்ற நலங்கள் என்ன? பேசுதி" (பாரதி.பா.)

எனினும் கண்ணம்மாவின் கேள்விகளுக்கு கடல் அலையிலும் நுரையிலும் சின்னக் குமிழியிலும், நீல விசும்பிலும், எல்லா பொருள்களிலும் அவளையே கண்டதாக விடை கூறுகிறான் காதலன்.

தன் காதலி உடன் இருப்பினும், இல்லாவிட்டாலும் அவளை எல்லாவிடத்தும் கண்டு அவளோடு "யோகமெய்திருக்கிறான்" காதலன்.

எனவே, பிரிவு என்பதேயின்றி எப்பொழுதும் இணைத்திருக்கின்ற யோக நிலையைப் பற்றி பாரதி பாடியிருக்கின்றார்.

தானுற்ற அனுபவத்தில் தன்னை இழந்து விடுவதாகிய அத்வைத யோகத்தை இப் பாடலில் சித்தரித்துக் காட்டுகிறார். மனிதனால்

பாரதி பாடியதைப் போல், பிரிவு என்பதேயின்றி எப்பொழுதும் இணைத்திருக்கின்ற யோக நிலையைப் பற்றி வேதாத்திரி மகரிஷி பாடியிருக்கின்றார்.

"அவனின் இயக்கம் அணுவாற்றல்,
  அணுவின் கூட்டுப் பக்குவம் நீ!
அவனில்தான் நீ! உன்னில் அவன்!
  அவன்யார் நீயார்? பிரிவேது?
அவனை மறந்தால் நீ சிறியோன்.
  அவனை அறிந்தால் நீ பெரியோன்,
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்,
  அறிவு முழுமை அது முக்தி" (ஞாக.பா.2)

மனிதனால் செய்ய முடியாததை யெல்லாம் செய்யக்கூடிய மாபெரும் ஆற்றல் மனிதனிலிருந்து இயங்குகிறது, பிரபஞ்சத்தையே இயக்குகிறது.

அவ்வாற்றலை சிந்தனாவாதிகள் இயற்கை என்கிறார்கள். விஞ்ஞானிகள் பிரபஞ்ச ஒருங்கிணைப்பு ஆற்றல் என்கிறார்ககள். மெய்ஞானிகளாகிய தத்துவவாதிகள் தெய்வம என்கிறார்கள்.

அது அங்கு, இங்கு என்று இல்லாமல் எல்லா இடயங்களிலும், எல்லாப் பொருட்களிலும், எல்லா இயக்க ளங் களிலும், எல்லா விளைவுகளிலும் குறைவில்லாமல் நீக்கமற நிறைந்துள்ளது என்று நமது முன்னோர்கள் கூறியுள்ளதைக் கேட்டு, அதையே மற்றவர்களுக்கும், பிற்காலத்தவர்களுக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அவ்வாறு கூறுவதற்குக் காரணமாயிருக்கும் அறிவை சிந்தனை மூலமாக உணர்ந்து தெளிவடைய வேண்டும்.

சிந்தனையானது மன அமைதியிலும், ஓர்மையிலும்தான் வரும்.

வலிமையான உடலை இயக்குவதும், உயிராக இயங்குவதும், அறிவாக உணர்வதும் அதே தெய்வம்தான் என்பதை உணரலாம்.

இயக்குவது அறிவு, இயங்குவது உயிர், உணர்வது மனம், இவையெல்லாம் எல்லைக் கட்டிய உடலுக்குள் இருப்பவை.

இவற்றைப் பற்றியெல்லாம் கற்றவர்களாயிருந்தாலும், கற்காதவர்களாக இருந்தாலும் அவர்களின் செயல்பாடுகளில் மலரும் விளைவு இன்பம் அல்லது துன்பம் என்பது தெய்வ நியதியாகும்.

பிரபஞ்சம் முழுவதம் இருப்பாக உள்ள தெய்வம், தன் ஆற்றலால் இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற இயல்பூக்கமாகிய அறிவால் அணுக்களாகி அவைகள் கூடிய கொத்தியக்கம்தான் சடப் பொருட்களாகவும் ஜீவன்களுமாகத் தன்நிலையில் மாற்றம் பெற்றுள்ளது.

- ஆகவே உனக்குள்ளாக தெய்வமும், தெய்வத்திற்குள்ளாக நீயும் இருப்பதை உணரும்போது, தெய்வமும் நீயும் பிரிவற்ற நிலையில் ஒன்றாகிவிட முடியும்.
- தெய்வ நிலையை நீ மறந்தபோது. மனிதன் என்ற சிறிய நிலையை அடைகிறாய்.

- தெய்வத்தோடு இணைந்திருக்கும்போது நீயும் அதே நிலையை அடைவதால் பெரியோன் ஆகிறாய்.
- சிற்றறிவைப் பேரறிவோடு இணைக்கும்போது எல்லாப் பொருட்களிலும் தன்னையும் தன்னில் எல்லாப் பொருட்களையும் உணரலாம்.
- அந்நிலை கைவரப் பெற்றால், அதுவே முக்தி, மோட்சம், முழுமைப்பேறு ஆகும்.
- இதுவே மனிதப் பிறவியின் நோக்கமும் உரிமையும் ஆகும்.

## 2. குயில் பாட்டில் தத்துவம்.

"காதல் காதல் காதல்
காதல் போயிற்காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்"

என்று தொடங்குகிறது குயிலின் பாட்டு.

ஓர் உயிர்மற்றோர் உயிரோடு அன்பினால். "தான்" என்னும் அகந்தை அகன்று இரண்டறக் கலத்தலாகிய அனுபமே காதல் அனுபவம்.

குயில்-சீவான்மாக கவி-பிரம்மம், குரங்கு மனம், மாடு-புத்தி, சோலையே உலகு. குயில் என்னும் சீவன் கவி என்னும் பிரம்மத்துடன் கலக்க விரும்புகிறது.

எனினும் இடையில் உலக மாயையில் சிக்குகிறது. நாம் மனத்தினை "மனக்குரங்கு" என்றும், அறிவற்றவனை "மாடு" என்றும் கூறுவதனை அறிவோம்.

எனவே குயில், மனமாம் குரங்கு அறிவிலியாம் மாடு இவற்றில் மனத்தைப் பறிகொடுக்கிறது.

இறுதியில் குயில் மயக்கம் தெளிந்து இறைவனுடன் இரண்டறக் கலக்கிறது.



shutterstock.com · 703014082

குயில் பரம்பொருளுடன் சேரமுடியாமல் மாடன் என்னும் கன்மமும், ஆணவம் என்னும் நெட்டைக் குரங்குடனும் தடுக்க, மாயையினால் மறுபிறப்பு எடுக்கிறது.

பின்பு பரமாத்மாவான மனிதனின் கைபட்டு சீவாத்மாவான குயில் மனித உருவாகி வீடு பேற்று நிலையை அடைகிறது.

பொருத்தமான குறியீடுகளோடு பாரதியார் எளிதாகப் படைத்திருக்கிறார்.

பாரதி குயிலை சீவன் என்கிறார். பரமாத்மா மனிதன். சீவாத்மா என்னதான் தவமாய்க் கிடந்தாலும் பரமாத்மாவின் அருள் இல்லாமல் பரப்பிரம்மத்தோடு இணைய முடியாது.

குயில் பாட்டு கற்பனையே என்றாலும் வேதாந்தப் பொருளோடு இயைபுப் படுத்திக் காண்பவர் காணலாம் என்று பாரதி காவியத்தை முடிக்கின்றார்.

ஓர் உயிர் மற்றோர் உயிரோடு அன்பினால். "தான்" என்னும் அகந்தை அகன்று இரண்டறக் கலத்தலாகிய அனுபமே காதல் அனுபவம். பாரதியின் கருத்தை வேதாத்திரியம் அழகாக வெளிப்படுத்துகிறது.

இரண்டறக் கலத்தல் பற்றி வேதாத்திரியம் பாடுகிறது.

இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விட்டு,
  ஏற்படும் ஓர் அமைதியில் விழிப்பாய் நிற்க
நிறைநிலையே தானாக உணர்வதாகும்,
  நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கும் மட்டும்,
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக்கொள்ள,
  உலக இன்பங்களிலே அளவு கிட்டும்,
கரை நீங்கி அறிவு மெய்ப்பொருளாகும்,
  கரைந்துபோம் தன்முனைப்பு காணும் தெய்வம்" (ஞாக.பா.1487)

இவ்வளவு எளிமையாக விளக்கம் கூறி நம்மை செம்மை படுத்திவிட்டார் மகரிஷி.

எல்லா யோக மார்க்கங்களும் முயற்சியை மையமாக வைத்து தான். நாமும் எதுவரை முயற்சி செய்ய வேண்டும் என்றால், இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விடும் வரை முயற்சி செய்தால் போதும்.

இதில் நம்மை முழுமையாக உணர்வு ரீதியாக நம்முடைய உணர்வை அகன்ற நிலைக்கு கொண்டு போகப்போக ஒரு கட்டத்தில் தானாக விரிய முடியாமல், விரிந்து செல்வதற்கு இடமும் இல்லாமல் ஒரு நிலைக்கு மனம் வரும்.

அப்போது அந்நிலையில் ஒரு அமைதி நிலை ஏற்படும்.

அந்நிலையில் மனம் விழிப்போடு நின்றால் அமைதியில் மனம் உறைந்து காணாமல் போகும்.

அமைதி என்பது கற்பிப்பது அல்ல, கற்பிக்கப் படுவதும் அல்ல. உருவாக்குவதும் அல்ல, உருவாக்கப்படுவதும் அல் ல. தானாய் தானே நிலை பெறுவதே அமைதி நிலை.

இது தான் மௌன நிலையும் ஆகும். இந்த நிலையை வார்த்தையால் விளக்கிச் சொல்லவே முடியாது.

அப்படி சொன்னால், அது பொய் தான். இங்கு தான் ‘தியானம்’ என்று ஒன்று மலரவே ஆரம்பிக்கிறது.

இதற்கு முந்தைய நிலை வரை மனம் ஓர்மை படுவதற்கு ஒரு பயிற்சி முறை தானே தவிர, அவைகள் தியானமாக கருதுவது தவறு.

தியானம் என்பது ஒரு செயல் அல்ல. தானாக நிகழ்வது. ஏன் விழிப்பாய் நிற்க வேண்டும் என்றால், இங்கு கூட நம்முடைய கர்ம வினை நம்முடைய உணர்வு தளத்தை தாக்குவதற்கு தயாராக இருக்கும்.

நம்மை அங்கேயே தங்க வைப்பதற்கு தன்னுடைய முழு முயற்சியோடு செயல்படும்.

அதனால், விழிப்போடு இருப்போமேயானால், இங்கு என்ன இருக்கிறது? என்றால், முன்னால் உற்பத்தியான சுத்தவெளி என்ற நிலையைக் கடந்து, நம்மால் உருவான எண்ணமற்ற, சூன்யமான அரூபமான எங்கும் முடிவில்லாத, உணர்வு தளம் வரும்.

அதுதான் சுத்தவெளி உணர்வு.  இந்த ஆகாய பெருவெளியில் வெறும் உணர்பவன்  மற்றும் உணரப்படும் சூன்ய பெருவெளி மட்டுமே இருக்க முடியும்.

முதலில் நாம் உருவாக்கிய வெளி.  பிறகு அதுவே நமக்குள் தானாக மலர்ந்த ஒரு விஷயம்.  இது தானாக சித்தியான ஒரு நிலை.

அமைதி வந்துவிட்டால் தேடுதல் நின்று விடும்.  தியானத்தின் மீதான ஈர்ப்பும், கவர்ச்சியும் விட்டு விலகிவிடும்.

இந்த இடத்தில் தான் நிறைய பேருக்கு குழப்பம் உண்டாகும் இடம்.

அதனால் இதன் அருகில் வந்தவுடனயே அது தான் சுத்தவெளி அனுபவம் என்று உறுதி செய்து கொண்டு அதில் இன்னும் ஆழ்ந்து போகாமல், அடுத்த அடுத்த மார்கங்களை நோக்கி நகர ஆரமித்து விடுகிறார்கள்.

இந்த இடத்திற்கு வந்துவிட்டோமானால் சர்வ கல்பத்தை நெருங்கி விட்டோம் என்று பொருள்.  இந்நிலையில் நாம் இன்னும் ஆழ்ந்து நம்மை இழக்க தயாராகிவிட்டால் சர்விகல்ப நிலை.

இந்த உணர்வை உணர்வது யார்?  எது?  உடலா? இல்லை மனமா? உயிரா?  தெரியாது.

ஆனால் உணர்வு மட்டும் இருக்கும்.  ஆக, நம்மால் உணரப்படும் அந்த எல்லையற்ற மௌனம், தெய்வீக வெளி, இந்நிலையில் தான் “நிறைநிலை” என்ற அடுத்த கட்டம் நிகழும்.

இந்த வார்த்தைகள் எல்லாம் மகரிஷி யோசித்து எழுதவில்லை.  அது (இறை) அவராக தன்னை வெளிப்படுத்தி வந்தவைகள் தான்.  இது தான் தற்செயல் இயக்கம்.

ஏனெனில், மகரிஷி என்ற ஒரு தனி மனிதன் அங்கு இல்லை.  செயல் மட்டுமே இருக்கிறது, செய்பவன் இல்லாமல் இருக்கிறது.  இது தான் “நிறைநிலையே தானாக உணர்வதாகும்”.

உணரப்படும் காணாமல் போய்விட்டது.  உணர்பவனும் காணாமல் போய்விட்டான்.

அதனால் தான் “நான் என்ற சிற்றறிவை நான் கடந்த போது நான் நீயாய் கூர்தலறம் வந்தியல்பு அறிந்தேன்” என்று கூறுகிறார் மகரிஷி.

ஆக, இயல்பில் அறிவதற்கு ஒன்றுமே இல்லை.  நான் உருவாகினதும் போய்விட்டது.

என்னுள் உருவானதும் போய்விட்டது. நான் நானாகவே நிற்கிறேன். அனால், பழைய நான் இல்லை. கவனித்த நான் காணாமல் போய்விட்டேன். அப்போ இருப்பது என்னவென்றால் அது தான் “தான்” (தானாய், சுயமாய்)

ஓர் உயிர்மற்றோர் உயிரோடு அன்பினால். ”தான்” என்னும் அகந்தை அகன்று இரண்டறக் கலத்தலாகிய அனுபவமே காதல் அனுபவம். இங்கு இறைக்காதலை வேதாத்திரியம் சொல்லியுள்ளது. வாழ்க வளமுடன்.

## 3. பாஞ்சாலி சபதத்தில் தத்துவம்.

பாரதியின் பாஞ்சாலி சபதம் காப்பிய இலக்கணக் கூறுகளைப் பெற்று ஒரு குறுங்காப்பியமாகக் காணப்படுகிறது.

”அறம் வெல்லும் பாவம் தோற்கும்” என்ற உண்மை ஒரு பெண் வாயிலாக நிலை நாட்டப்படுவதாக அமைந்த கதை, பாரதியின் உள்ளத்தை மிகவும் கவர்ந்ததில் வியப்பில்லை.

இறைவனிடம் மன உறுதியும், நம்பிக்கையும் கொண்டு வாழ்ந்தால் நன்மைகள் நம்மை வந்தடையும் என்ற ஒப்பற்ற தத்துவத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டவர்களின் வாழ்க்கை-அறத்தின் பால் அசையாத நம்பிக்கை கொண்டு, துன்பத்தின் எல்லையிலும் அதனைக் கண்டு அஞ்சாமல் நின்று எதிர்த்துப் போராடிய பஞ்சவரின் வாழ்க்கை- பாரதியின் வாழ்க்கைத் தத்துவமாக விளங்கியது.

”தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்,
தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை.
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்”
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தாள்” (பாரதியார்)

என்று பாரதி அர்சுனன் வாயிலாக எடுத்துக் காட்டுகிறார்.

நல்லவர்களைப் புடமிட்டு பொன்னாக்கும் பொருட்டு" மனம் வாடும் வரை சோதனை செய்து அவர்களைத் தூய்மை ஆக்குகிறான் இறைவன்.

மேலும், "அறம் வெல்லும்" என்னும் உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டவும் அவர்களை .இறைவன் கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறான் என்னும் வாழ்க்கைத் தத்துவத்தை பாஞ்சாலி சபதம் விளக்குகிறது.

பாரதியார், யோகம், அத்வைதம், விசிட்டாத்துவைதம் ஆகிய பல தத்துவங்களையும் உட்கொண்டு பாடினாரேனும் அவர்தம் உட்கிடக்கை அனைத்து மத-தத்துவப் பொது நோக்கம் ஒன்றேயாகும்.

"பல வகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே", "யாமறிந்த மதங்கள் பல உளவாமன்றே யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே" என்பன போன்ற பாடல்கள் சான்றாகும்.

பாரதியாரைப் போன்றே "பேரற வாழ்வு" வாழ வேண்டும் என்று வலியுறுத்துகிறது வேதாத்திரியம்.

"அறம்புரியப் பொருள்ஈட்டி தனியார் காக்கும்
  அல்லல்களும் வேண்டாம். பின் பிச்சைவாங்கும்
துறவுமுறையும் வேண்டாம். மக்கள் பற்றோ
  சொத்துப் பற்றோ சிறிதும் வேண்டாம். கூட்டு
உறவினிலே பொருள் பெருக்கி, நிர்வ கித்து.
  உலகெங்கும் எனக்குரிமை" என்று இயற்கை
மறவாத பேரறமே சிறந்த தாகும்.
  மனிதஇன இலட்சிய வாழ்விதுவே யாகும்." (ஞாக.பா.1425)

அறமான செயல்களுக்காக என்று கூறி பொருள்களை எவ்வகையிலும் ஈட்டி, தனி நபர்கள் இருப்பு வைத்து.அதனைக் காப்பதற்காக என்று அல்லல்பட வேண்டாம்.

செல்வர்களின் இருப்பை ஏழைகள் பிச்சை ஏற்று வாழும் துறவு முறை வாழ்வும் வேண்டாம்.

உடன் வாழும் மக்களிடமும், மூலதன இருப்பாக உள்ள சொத்துக்களிடமும் பற்று என்பது சிறிதளவும் வேண்டாம்.

மக்கள் கூட்டுறவு முறையிலே முயற்சித்து செயலாற்றி பொருட்களைப் பெருக்கி, அவற்றை நிர்வகித்து பொது உடைமை முறையிலே முயற்சித்து செயலாற்றி பொருட்களைப் பெருக்கி, அவற்றை நிர்வகித்து பொது உடைமை முறையில் உலகம் முழுவதும் தமக்கு உரிமையானது என்ற இயல்பை மறவாத பெரிய அறமே எல்லா அறங்களிலும் உயர்ந்ததும் சிறந்ததும் ஆகும்.

இதுவே தான் மனித இனத்தின்  இலட்சிய வாழ்வு ஆகும்.  ஒத்தும் உதவியும், இட்டுண்டு, பகிர்ந்து உண்டு. ஆன்ம சுதந்திரத்துடன் மனிதன்  வாழும்போது இனிமையாக வாழலாம்.

மனித வாழ்வின் நோக்கமே இனிமையாக நிறைவாக அமைதியாக வாழ்வது ஆகும்.  பேரற வாழ்வின் மூலமே மனிதகுலம் அந்நிலை எய்த முடியும்.

# *4. வெட்டவெளி தத்துவம்*

- சுத்தவெளி என்ற இறைநிலை நொறுங்கி இறைத்துகள் ஆயிற்று.
- இறைத்துகள்களின் தொகுப்பு தான் விண்.
- விண்களின் தொகுப்புகள்தான் தோற்றப்பொருட்கள் அனைத்தும் ஆகும்.
- விண்களின் சுற்றோட்டம் தோற்றப் பொருட்களில் சீரான முறையில் அமைந்தபோது உயிரினங்கள் தோன்றின.
- முடிவில் சிறப்பான அறிவுடைய மனிதன் தோன்றினான்.
- இதுவே சுத்தவெளி எனும் இறைநிலையின் தன்மாற்ற வரலாறு ஆகும்.

வேதாத்திரியம் விளக்கும் தத்துவம் இதுவாகும்.

வெட்டவெளி யைப் பற்றி பாரதியார் பாடுகிறார். . . .

“வெட்ட வெளியாய் அறிவாய் வேறுபல சத்திகளைக்
கொட்டு முகிலாய் அணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்
தூல அணுக்களாய் சூக்குமமாய் சூக்குமத்தில்
சாலவுமே நுண்ணியதாய் தன்மையெலாம் தானாகி

தன்மை ஒன்றில்லாததுவாய் தானே ஒருபொருளாய்
தன்மை பலவுடைத்தாய் தான்பலவாய் நிற்பதுவே” (பாரதியார்)

இவையெல்லாம் பாரதியை தனித்தன்மை மிக்க ஆன்மீக தரிசனம் கண்டவனாய் நிலை நிறுத்துகிறது

## சுத்தவெளி தத்துவம் வேதாத்திரியம்

சுத்தவெளிதான் இறைநிலை. இதுவே தான் கடவுள் ஆகும். இறை நிலையானது எல்லாம் வல்ல பூரணப் பொருள்.

இதன் இயல்பான தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் அதற்குள்ளாகவே செறிவு ஏற்பட்டு மடிப்புகள் விழுந்து, அதன் சூந்தழுத்தும் ஆற்றலாலேயே மிக விரைவான தற்சுழற்சி பெற்ற நுண்துகள்தான் முதல்நிலை விண் எனும் பரமாணு.

இந்த நுண்ணணுக்களின் கூட்டங்களே பேரியக்க மண்டலத்தில் காணும் அனைத்துத் தோற்றங்களும் ஆகும்.

முதல் நிலை விண்களின் விரைவான தற்சுழற்சியானது அதைச் சுற்றியுள்ள தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலான இறைவெளியோடு உரசும் போது எழுகின்ற நுண் அலைகள் தான் காந்தம் எனும் நிழல் விண்கள்.
.
நிழல் விண்கள் இறைவெளியின் சூழ்ந்தழுத்தத்தைத் தாங்க முடியாமல் கரைந்து போகும் நிகழ்ச்சிகள் தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்பனவாகும்.

இறைவெளியானது முதல்விண், நிழல்விண், காந்தம், காந்தத் தன் மாற்ற நிலைகளான அழுத்தம் முதல் மனம் வரையிலான ஆறுவகை.

இவற்றை மனதில் பதியவைத்துக் கொண்டு பிரபஞ்சத்தை எண்ணிப் பார்த்தால், ஆராய்ந்தால் பேரியக்க மண்டல தோற்றம் இயக்கம் விளைவுகள் அனைத்தும் விளங்கிவிடும்.

பரமாணு முதல் கொண்டு, எந்தப் பொருளும் இறைநிலையாகவே இருக்கும் காட்சி அறிவிற்கு உண்டாகும்.

எல்லா இடங்களிலும் எக்காலத்திலும் எல்லாப் பொருட்களிலும் இறைநிலையை உணரக்கூடிய பேரறிவுதான் பிரம்மஞானம் எனப்படுகின்றது.

"பேரியக்க மண்டலத்தைத் தத்துவங்கள்
பத்தாக விளங்கிக் கொள்வோம்.

பெரியசுமை மனதிலிருந் திறங்கிவிடும்.
மனம்அறிவாம் சிவமு மாகும்.

ஓரியக்க மற்றநிலை வெட்டவெளி
இருப்பதுவே; ஆதியாகும்.
உள்ளமைந்த ஆற்றலே உருண்டியங்கும்
விண்ணாகும். அதிலெ ழுந்த

நேரியக்க விரிவுஅலை நெடுவெளியில்
கலப்புறவான் காந்த மாச்சு.
நிகழ்காந்தத் தன்மாற்றம் அழுத்தம்ஒலி
ஒளிசுவையும் மணம்மனம்ஆம்.

சீரியக்கச் சிறப்புகளை விளைவுகளை
உள்ளுணர்ந்தால் அதுமெய்ஞ் ஞானம்.
சிந்திப்போம், உணர்ந்திடுவோம், சேர்ந்திருப்போம்
இறைநிலையோ டென்றும் எங்கும்!" (ஞாக.பா.1674)

## தாத்தாவும் பேரனும் - வேதாத்திரியம்

முதலில் தோன்றிய விண் மகன். முதல் விண்ணிலிருந்து இரண்டாவதாகத் தோன்றிய நிழல்-விண்ணோ இறைவெளிக்குப் பேரன்.

பேரன் எங்கே போனாலும் தாத்தாவுடன் சேர்ந்து கொண்டான். நிழல் விண் இறைவெளியோடு கலந்துவிட்டது தான் காந்தம்.

அப்படியானால் தாத்தாவும், பேரனும் அதாவது இறைவெளியும், நிழல் விண்ணும் ஆடும் கூத்துத் தான் பிரபஞ்சம்.

இறைவெளியில் நிழல் விண்கரைந்த நிலை காந்தம். காந்தம் தான் அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக, மனமாகப் பிரபஞ்சம் முழுவதிலும் எல்லாப் பொருளிலும் இருக்கிறது.

இறைவெளி என்ற தாத்தாவும், நிழல் விண் என்ற பேரனும் ஆடுகிற கூத்துத் தானே இவையனைத்தும்!

இறைவெளி புலன்களுக்கு எட்டாது இருந்ததனால் அதை விவரித்துச் சொல்ல முடியவில்லை.

ஆனால், எப்படித் தத்துவஞானிகள் கண்டுபிடித்தார்கள்? மனம் சுழல் விரைவு அதிகமாயிருக்கிறபோது அது அலை. அலைக்கு அடித்தளமாக

இருப்பது இறைநிலை. இறைநிலையிலிருந்து அலை விலகி நிற்கிற மாதிரி இருக்கும்.

ஆனால், மன அலைச் சுழல் விரைவு குறையக் குறைய, இறையுணர்வும் இறையாற்றலும் அந்த மனத்திற்கு வலுவைத் தருகின்றன.

அப்படியே அந்த இறைநிலையோடு நெருங்கி இருக்கிறபோது, மனம் இறை நிலையைத் தெரிந்து கொள்கிறது.

இறை நிலையிலிருந்து தானே எல்லாமே வந்தன? எல்லா இயக்கங்களும், பதிவுகளும் வான்காந்தத்தில் தான் இருக்கின்றன.

அதோடு மனம் இணைகிறபோது அங்கிருக்கக்கூடிய உண்மைகள் எல்லாம் தெரிகின்றன. நேற்று நடந்த செயலை நினைத்தால் நினைவிற்கு வருகிறது போலத் தனக்குள்ளாகவே பிரபஞ்ச ரகசியங்கள் தெரியும். வாழ்க வளமுடன்.

## 5. ஞாலம் உயிர்கள் அனைத்து மவன்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் அருவம், அருவுருவம், உருவம் என்ற மூன்று நிலையில் உயிர்களுக்கு அருள் பாலிக்கிறான்.

இறைவனுக்கென்று தனியே ஓர் உருவம் இல்லை.
உயிர்கள் உய்யும் பொருட்டு உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப பல்வேறு வடிவங்கள் அமைத்துக் கொள்ளப் பெற்றன.

“நானா வித உருவாய்நமை ஆள்வான்”
“பல பல வேடமாகும் பர நாரிபாகன்”

என்று திருஞானசம்பந்தரும்

“பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை”

என்று திருநாவுக்கரசரும்

“வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும்
நூறு நூறு ஆயிரம் இயல்பினதாகி”

“ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமே”

என்று மாணிக்கவாசகரும் குறிப்பிட்டுள்ளனர்.

*பாரதியாரோ எல்லாவற்றிலும் தன்னை பார்க்கிறார். என்னே ஒரு ஞானநிலை?*

வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்;
மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்;
கானிழல் வளரும் மரமெலாம் நான்,
காற்றும் புனலும் கடலுமே நான்

விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்,
மண்ணில் கிடக்கும் புழுவெலாம் நான்,
வாரியிலுள்ள உயிரெலாம் நான்

கம்பனிசைத்த கவியெலாம் நான்,
காருகர் தீட்டும் உருவெலாம் நான்;
இம்பர் வியக்கின்ற மாட கூடம்
எழில் நகர் கோபுரம் யாவுமே நான்

இன்னிசை மாத ரிசையுளேன் நான்;
இன்பத் திரள்கள் அனைத்துமே நான்;
புன்னிலை மாந்தர் தம் பொய்யெலாம் நான்;
பொறையருந் துன்பப் புணர்ப்பெலாம் நான்

மந்திரங் கோடி இயக்குவோன் நான்,
இயங்கு பொருளின் இயல்பெலாம் நான்,
தந்திரங் கோடி சமைத்துளோன் நான்,
சாத்திர வேதங்கள் சாற்றினோன் நான்

அண்டங்கள் யாவையும் ஆக்கினோன் நான்,

அவை பிழையாமே சுழற்றுவோன் நான்;

கண்டநற் சக்திக் கணமெலாம் நான்,

காரண மாகிக் கதித்துளோன் நான்

நானெனும் பொய்யை நடத்துவோன் நான்;

ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்

ஆனபொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்

அறிவாய் விளங்கு மு த ற சோதிநான்!

"இறைநிலையே நானாக இருக்கிறது. ஞாலம் உயிர்கள் அனைத்தும் அவன்" என்கிறது என்பது வேதாத்திரியம்.

"நானே ஈசன்" சொல் விடுத்து,<br>
"நற்பொருளான ஈஸ்வரனே"<br>
நானுமாக இருக்கின்றான்.<br>
"ஞாலம் உயிர்கள் அனைத்து மவன்."<br>
நான் இவ்வுண்மை உணர்ந்த பயன்<br>
நல்லுலகுக்கே எனை ஈந்தேன்.<br>
நானினித் தூயன் என நின்று,<br>
நற்றொண்டாற்றி இன்புறுவீர்!" (ஞாக.பா..1599)

நானே ஈசன் என்று ஒரு மனிதர் கூறினார் என்றால், இவர் மட்டுமே கடவுள் என்று கூறுவதாகப் பொருள்படும்.

அதனால் இம்மனிதருக்குத் தன்முனைப்பும் எழுச்சியுறும்.

ஆகவே நானே கடவுள் எனக் கூறுவதை விடுத்து மேன்மையான மெய்ப்பொருளான, உயிர்களில் கலப்புற்றுள்ள ஈஸ்வரனே, நானுமாக ஆகியுள்ளான் என்று கூறும்போது தன்முனைப்பு எழாது.

உலகம், உயிர்கள் அனைத்திலும் இறைநிலையே இருந்து. காத்து, முடித்தும் வைக்கிறது என்ற உண்மையை நான் உணர்ந்து கொண்டதன் பயனாகவே, என்னை உலக நலத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டேன்.

நான் ஆன்மக் களங்கங்களிலிருந்து விடுபட்டு தூய்மையானவனாக உள்ளேன் என்று உள்ள உறுதியுடன், நல்முறையில் தொண்டு செய்து இன்புறுவீர்களாக!

உயிர்கள் அனைத்திலும் கலப்புற்றுள்ள இறைநிலை என் உள்ளும் புறமுமாகவும் இருக்கிறது என்ற உண்மை உணர்வில் தன்முனைப்பு இல்லாமல் தொண்டு செய்து இனிது வாழ்வோம்.

## 6. நானும் ஓர் கனவோ?

பிரபஞ்சம் முழுவதும் இயங்கிக் கொண்டிருப்பனவற்றின் பொருள் நிலை எது? நிகழ்ச்சி நிலை எது?

ஆப்பிள் பழம் என்பது பொருளா நிகழ்ச்சியா? ஐம்புலன்களால் காணப்படும் உணரக்கூடிய அனைத்தையும் பொருட்கள் என்றுதான் சொல்வோம். அது மொழி வழக்கு.

தோற்றப் பொருட்கள் அனைத்தும் பொருள் எனக் கொள்வது சாதாரண மனப்போக்கு. ஆனால் உண்மை யி ல அவை பொருளா என சிந்திக்க வேண்டும். ஆராய வேண்டும்.

"உருவம் மலர்தான். உட்பொருள்
    உணர விண்ணெனும் நுண்ணணுவே!
அருவம் ஆதி அசைந்த நிலை,
    அணுமுதல்அகண்ட பேரண்டம்!" (ஞாக.பா.1649)

புலனறிவைத் தாண்டி விண்ணறிவுக்குப் போக வேண்டும். பழத்தை நெருப்பில் போட்டால் எரிந்து சாம்பலாகிவிடும்.

பழம் என்ற காட்சி மறைந்துவிட்டது. அப்படியானால் பழம் என்பது அணுக்கள் இணைந்த ஒரு காட்சி-நாடகம். பழத்தில் நின்ற அணுக்கள் அழிந்துவிட்டதா என்றால் இல்லை.




அணுக்கள் என்பது நுண்ணியக்க மூலக்கூறான இறைத்துகளின் தொகுப்பு. இறைத்துகளோ இறைநிலையின் பின்னம் ஆகும்.

அசைந்து கொ   ணடி   ருக்கும் பொருட்கள் அனைத்தும் தன்னுடைய நிலையில் மாறிக் கொண்டே இருக்கின்றன. அதனை நிகழ்ச்சி என்கிறோம்

அசைவைக் கழித்துவிட்டால் மிச்சம் இருப்பது இறைநிலையேதான். வேதாத்திரி மகரிசி அறிந்த இதை பாரதியார் முன்பே கூறியுள்ளார்.

"நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே
நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே
நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம்
சொற்பனந்தானோ? பல தோற்ற மயக்கங்களோ?
சொற்பனந்தானோ? பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே கேட்பதுவே கருதுவதே நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?
அற்ப மாயைகளோ? உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே இளவெயிலே மரச்செறிவே
வானகமே இளவெயிலே மரச்செறிவே நீங்களெல்லாம்
கானலின் நீரோ? வெறும் காட்சிப் பிழைதானோ?
வானகமே இளவெயிலே மரச்செறிவே நீங்களெல்லாம்
கானலின் நீரோ? வெறும் காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப்போல் புதைந்தழிந்தே போனதனால்
நானும் ஓர் கனவோ? இந்த ஞாலமும் பொய்தானோ?

காலமென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பல நினைவும்
கோலமும் பொய்களோ? அங்குக் குணங்களும் பொய்களோ?
காலமென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பல நினைவும்
கோலமும் பொய்களோ? அங்குக் குணங்களும் பொய்களோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம் காண்பமன்றோ? நானும் ஓர் கனவோ? இந்த ஞாலமும் பொய்தானோ?" (பாரதி)

உலகத்தின் காட்சி பொய்யோ மெய்யோ? மிக உயர்ந்த தத்துவ ஆராய்ச்சியின் கண் வெளிப்பட்ட இந்தக் கேள்விக்கு பாரதியார் சரியானதொரு விடையையும் பெறுகிறார்.

தெய்வநிலையில் கடைசி வடிவம் மனிதன். தெய்வமே காற்றாக, கனலாக, கோளாக, மண்ணாக, புல்லாக, புழுவாக விலங்கினமாக, தானுமாக இருப்பதை உணர்ந்து கொள்கிறார்.

அந்த உணர்வில் தெய்வமே அனைத்துமாக இருக்கிறது என்பதற்குப் பதிலாக, அனைத்துமாக வந்து கடைசியாக தானுமாக இருப்பதால் அனைத்துத் தோற்றமும் நானே என்கிறார். வாழ்க வளமுடன். .

## 7. செய்க தவம்! செய்க தவம்!

மனம் தன் திறமையையும் வல்லமையையும் பெருக்கிக் கொள்ளும் பயிற்சியே தவம்.

பாரதியார் குள்ளச் சாமியாரிடமும், தத்துவஞானி வேதாத்திரியார் பரஞ்சோதி மகானிடமும் தவத்தை தீட்சை மூலம் பெற்று சிறப்பான நிலையை அடைந்தார்கள்.

எடுத்த காரியம் யாவினும் வெற்றி அடைய வேண்டுமென்று தான் எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் நடைபெறுகிறதா? எண்ணி எண்ணிப் பல நாளும் முயன்று இங்கு இறுதியில் சோர்வடைகிறோம்.

எய்த விரும்பியதை எய்தப் பாரதி ஒரு வழி காட்டுகிறார். **செய்க தவம் செய்க தவம் நெஞ்சே, தவம் செய்தால் எய்த விரும்பியதை** எய்தலாம்

தவம் செய்தால் எய்த விரும்பியதை எய்தலாம். துருவன், பகீரதன், அர்ஜுனன் முதலானோர் தவம் செய்து விரும்பியதை அடைந்தனர்.

அவர்களைப் போல நாமும் கானகம் சென்று கனி கிழங்குகளைப் புசித்து நீரிடையேயும் நெருப்பிடையேயும் ஒற்றைக் காலில் நின்று

இரவு பகல் விடாது இறைவன் பெயரை உச்சரிக்க வேண்டுமா? (தவம் என்றால் இப்படித் தான் என்று கேட்டு வந்திருக்கிறோம்.) அப்படிச் செய்வதற்கு வேண்டிய மனத் திண்மை நம்மிடம் இல்லை.

அஞ்ச வேண்டாம். பாரதி கூறுவது மிக எளிமையான தவம். அது தான் அன்பு செய்வது. வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை என்கிறார் அவர்.

இது எளிமையானது மட்டுமல்ல, முனிவரின் தவத்தை விட மேம்பட்டதும் ஆகும்.

துறந்தார் பெருமை பெரிது அதனினும் பெரிதாகும் இங்குக்
குறைந்தாரைக் காத்து எளியார்க்கு உணவீந்து குலமகளும்
அறந் தாங்கு மக்களும் நீடூழி வாழ்கென அண்டமெலாம்
சிறந்தாளும் நாதனைப் போற்றிடும் தொண்டர் செயும் தவமே."
(பாரதி)

"மானிடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றி நீர் பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர் தருமேல் மண் மீது மரங்கள்
வகை வகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்குமன்றே
யானெதற்கும் அஞ்சுகிலேன் மானிடரே நீவிர்
என் மதத்தைக் கைக்கொண்மின், பாடுபடல் வேண்டா
ஊனுடலை வருத்தாதீர் உணவு இயற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்" (பாரதி)

அன்பு செய்து கொண்டிருந்தால் போதும். உழ வேண்டாம், விதை போட வேண்டாம், எல்லாப் பயிர் வகைகளும் செழித்து ஓங்கும்.

பாரதி ஏதோ மயக்கத்தில் உளறுவதாக நினைத்தோம் என்றால், வள்ளுவரும் இதையே கூறுகிறார்.

அன்பே தவம் என்று சொன்ன பாரதி வேறோரிடத்தில் தவமே யோகம், யோகமே தவம் என்கிறார். அதாவது அன்பு, தவம், யோகம் இவை ஒரு பொருள் சொற்கள். யோகத்தை விளக்குகிறார் –

**ஊருக்கு உழைத்தல் யோகம்.**

பாரதி குறிப்பிடும் தவம் என்பதும் அன்பு செய்தல் என்பதும் ஊருக்கு உழைத்தலைத் தான் குறிக்கிறது என்பதை அறிகிறோம்.

பாரதியால் பெரிதும் போற்றப்பட்ட பகவத்கீதையின் இந்தக் கருத்தைக் கவனியுங்கள்.

யாகத்தில் மிஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். எவர் தமக்காகச் சமைக்கிறார்களோ அவர்கள் பாபத்தை உண்கின்றனர்.

இங்கு யாகம் எனப்படுவது பிறர் நன்மைக்காகச் செய்யப்படும் செயல்களைக் குறிக்கிறது. எனவே உழைக்கத் தான் வேண்டும்,

ஆனால் தனக்காக அல்ல, பிறருக்காக என்பதே பாரதியின் கொள்கை என்பதை அறிகிறோம்.

ஊருக்காக உழைத்தால் அது உழைப்பாகத் தோன்றாது, உடலை வருத்தாது. தன்னலமின்றிப் பொதுப்பணியில் ஈடுபட்டவர்கள் மட்டுமே இதை உணர முடியும்.

இது தொடர்பாக வினோபா கூறுகிறார் – “தாய், குழந்தைக்கு வேண்டிய போஷணையைச் செய்கிறாள். நான் என்ன செய்து விட்டேன், ஒன்றுமே செய்யவில்லையே, எனக்கு இது ஒரு பாரமா என்று அவள் கேட்கிறாள். மனிதன் இதய பூர்வமாய்க் கர்மம் செய்கையில் வேதனை, கஷ்டம், ஆயாசம் போன்ற எதுவுமே இருப்பதில்லை.”

பிறர் நலனுக்காக உழைக்கும்போது உடம்போ மனமோ பாதிக்கப்படுவதில்லை, எனவே அது உழைப்பே அல்ல.

எனவே அன்பு செய்யுங்கள். சூழ்ந்ததெல்லாம் கடவுள் எனக் கருதி எல்லாவற்றிடத்தும் அன்பு செய்யுங்கள். பிறர் நன்மை மட்டும் கருதி உழையுங்கள்.

உங்கள் வயிற்றுப் பாட்டை இறைவன் கவனித்துக் கொள்வான். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும். அதுவே தவம். தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடும் வழியும் அதுவே.

”செய்கதவம் செய்க தவம் நன்நேஞ்சே தவம் செய்தால்
எய்த விரும்பியதை யெய்தலாம், வையகத்தில்

அன்பிற் சிறந்த தவமில்லை, அன்புடையார்
இன்புற்று வாழ்த லியல்பு."

**என்று தவத்தின் பெருமையைப் பாரதி பாடுகிறார்.**

"தவமொன்று மில்லையொரு சாதனையு மில்லையடா!
சிவமொன்றே யுள்ளதெனச் சிந்ததை செய்தாற் போதுமடா!"

"யோகந்தான் சிறந்ததுவோ? தவம் பெரிதோ? என்றேன்
யோகமே தவம், தவமே யோக மென உரைத்தாள்
ஏகமோ பொருளன்றி இரண்டாமோ? என்றேன்
இரண்டுமாம், ஒன்றுமாம், யாவுமாம் என்றாள்." (பாரதியின் தனிப்பாடல்.அழகுதெய்வம்)

**பாரதி தவத்தை எளிமைப்படுத்தினார். வேதாத்திரியோ தவத்தை விஞ்ஞானமாக்கி மானுடப் பயனுக்கு வழங்கியுள்ளார். ஊரெங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்கள் வாயிலாக எளியமுறை தியானத்தை கற்பித்து வருகிறார்.**

## தவமும் வேதாத்திரியமும்

வினா : தவத்தினால் வாழ்வு ஒளிவிடும் என சுவாமிஜி கூறுகிறார்கள். தவம் செய்து ஊழினை மாற்றி அமைக்க முடியுமா? தவம் இயற்றுபவர்கள் எல்லோருமே நிறைவான வாழ்வு வாழ்கிறார்களா? ...

விடை : தவத்தினால் வாழ்வை ஒளிமயமாக்கிக் கொள்ள முடியும் இதற்குச் சான்றாக

"ஊழையும் உப்பக்கம் காண்பார் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்".

என்னும் குறட்பாவே போதுமானது.

விதியை மதியால் வெல்லலாம் என்னும் பழமொழியையும் நினைத்துப் பாருங்கள்.

மதி என்பது அறிவு. தவம் செய்வதினால் வலிமையும், கூர்மையும் மதிபெறும்.

அத்தகு மதியானது இனி ஆற்ற இருக்கும் செயல்களை ஒழுங்குபடுத்தி வாழ்க்கையில் இது வரை கிடைக்காத வெற்றியையும் மேன்மையையும் ஏற்படுத்தித் தரும்.

தவம் செய்பவர்கள் முறையாகவும் தொடர்ந்தும் செய்து வருவதோடு நமது மனவளக்கலை மன்றத்தில் மட்டும் போதிக்கப்படும்

தற்சோதனை பயிற்சிகளையும் சேர்த்துச் சிரத்தையோடு செய்து வருவார்களானால் தங்களது இயற்கை சுபாவங்களை மாற்றி அமைக்கும் குண நலப்பேற்றை எய்த முடியும்.

நிறைவாக முழுமைப் பேற்றையும் எய்தலாம். நீங்கள் கேட்கக்கூடிய நிறைவான வாழ்வும் அதுவே. அத்தகு மேம்பட்ட வாழ்க்கையினை நமது மன்றத்தினர் அனேகம் பேர் அடைந்திருக்கிறார்கள். வாழ்க வளமுடன்

# 8.மனிதனின் சரித்திரம்

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் அருவம், அருவுருவம், உருவம் என்ற மூன்று நிலையில் உயிர்களுக்கு அருள் பாலிக்கிறான்.

இறைவனுக்கென்று தனியே ஓர் உருவம் இல்லை.
உயிர்கள் உய்யும் பொருட்டு உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப பல்வேறு வடிவங்கள் அமைத்துக் கொள்ளப் பெற்  றன.

“நானா வித உருவாய்நமை ஆள்வான்”
“பல பல வேடமாகும் பர நாரிபாகன்”

என்று திருஞானசம்பந்தரும்

“பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை”

என்று திருநாவுக்கரசரும்

“வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும்
நூறு நூறு ஆயிரம் இயல்பினதாகி”

“ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமே”

என்று மாணிக்கவாசகரும் குறிப்பிட்டுள்ளனர்.

உருவத்தையுடைய நமக்கு உருவமுடைய ஒரு பொருளை எளிதில் கண்டுகளிக்க முடியுமே தவிர உருவமற்றதைக் காண முடியாதாகையால் நமக்கிரங்கி அவன் திருவுருவத்தைக் கொண்டான்.

அருவமான கடவுளை, நாம் பேதத்தோடு கலந்துறையும் காலம் வரை உருவமாகக் கண்டு களிக்க முடியுமே தவிர அருவமாகக் கண்டு அடைய முடியாது.

இறைவன் உருவத்திருமேனி கொண்டு வந்தால் தான் எளிதில் காணமுடியும்.

“இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய்! உளவாமல் நீர்நிழல்போல் – இல்லா
அருவாகி நின்றானை யாரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று.”

என்று சாத்திரமும் உருவத் திருமேனியை உயர்த்திக் காட்டுகிறது.

உயிரான ஈசனுக்கு மதமுமில்லை, இனமுமில்லை.
நமக்குள் உள் நின்று இயக்கும் சக்தி கடவுள்.

எந்த குணத்தின் தன்மையை நுகர்கின்றோமோ அதை நம் உயிர் இயக்கி அந்த உணர்வின் செயலே தெய்வமாக நம்மை இயக்குகின்றது என்பதே ஞானிகள் உணர்த்திய பேருண்மைகள்.

மனிதன் தன்னைத் தான் அறிந்து விண் செல்லும் நிலை பெறச் செய்வதற்கே அன்றைய ஞானிகள் காவியங்களைத் தீட்டி காரணப் பெயர்களைக் கொடுத்தார்கள் சாஸ்திர வடிவில்.

பாரதியார் தமது பாடல்களிலே அத்வைத நிலையில், தானே எல்லாமாக இருப்பதை பார்த்து வியக்கிறார். பாடுகிறார்.

”காக்கைக் குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசை எல்லாம் நாமன்றி வேறில்லை,
நோக்க நோக்க களியாட்டம்” (பாரதியார்)

## *மனிதனின் சரித்திரம்* - வேதாத்திரியம்

பூரணப் பொருளே புதுமை யடைந்து
ஆரணமான அணுவாய் விரிந்து
அணுவின் கூட்டம் இயக்கம் பக்குவம்
அசைவாய் இசைவாய் அண்ட கோடிகளாய்
ஓரறிவினம் முதல் ஐயறிவினம் வரை
ஊனாய் உயிராய் உருவ பேதங்களாய்
தானாய் விரிந்த தத்துவமாகிய
சுவைமுதல் ஐந்தையும் சுகிக்கவும் அறியவும்
கர்ம ஞானக் கருவிகள் பெற்று
அறிந்தும் வாழ்ந்தும் அரூப நிலையாம்.” !(ஞாக.பா.290)

வேதாத்திரிய சிந்தனைகள் : - "நானே நாம்" :-

நான் என்ற தத்துவமே நாமா யுள்ளோம்
 நாடுகள் பலவற்றில் வாழுகின்றோம்
ஊன் உருவம் வரையில் அறிவெல்லை யாக்கி
 ஒருவருக் கொருவர் இன, தேச, சாதி,
தான், தனது எனும் பேதம் கொண்டு வாழ்வில்
 தனித்தியங்கித் துன்புற்றோம், ஆழ்ந்தா ராய்ந்து,
ஆd;மநிலை யறிந்ததனால், பேதமற்ற
 அரூபசக்தி நிலையில் நாம் ஏகனானோம்." (ஞாக.பா.876)

- இருப்புநிலை என்ற பரம்பொருளும் அதன் எழுச்சி நிலையாகிய விண்ணும் இணைந்தே எல்லா தோற்றங்களும், எல்லாஉயிரினங்களும், மனிதன் உட்பட என்பதை நாம் உணரவில்லை.
- இந்தக் காரணத்தால், தான், தனது என்று அறிவு குறுகிய நிலையில் எல்லை கட்டி இயங்குவதால் சாதி, மதம், மொழி, தேசம் என்ற நிலையில் நம்மைத் தனிப்படுத்தி வாழ்க்கையில் துன்பப் படுகின்றோம்.

- நமது பெற்றோர், அவர்கள் பெற்றோர், அவர்கள் பெற்றோர்... என்று பின்னோக்கி ஆராய்ந்து பார்த்தால் நாம் அனைவரும் ஒருவரின் பிள்ளைகளே என்ற உண்மை தெரியவரும்.
- அவருக்கு மூலம் இரண்டு விலங்கினங்கள் ஆகும். விலங்கினங்கள் ஐந்து அறிவு. அவைகளுக்கு முன் நான்கு, மூன்று, இரண்டு, ஓர் அறிவு தாவரம்வரை செல்லும்.
- அவைகளுக்கு மூலம் பஞ்ச பூதங்கள். இதில் முதல் தத்துவம் விண். விண்ணுக்கு மூலம் சுத்தவெளி எனும் பரம்பொருள்.
- இந்த நிலையில் நாம் நம்மை நோக்கிப் பார்த்தோமானால் நம் எல்லோருக்கும் மூலம் ஒன்றே.
- இப்போது நாம் அனைவரும் ஒருவரே என்ற உண்மை அறிகிறோம்.

உருவ நிலையில் நாம் வேறுவேறு. அருவ நிலையில் நாம் ஒன்றே. அதுவே இறைநிலை. வாழ்க வளமுடன்.

## 9.மனமெனும் பெண்ணே!

மனம் ஒரு நிரந்தரமான பொருள் இல்லை. உயிரிலிருந் து தெ டர் ந் து வந்து கொண்டேயிருக்கும் அலை இயக்கம்தான் மனம்.

மனம் என்ற நிலத்தில் எது போட்டாலும் விளையும். ஆனால் எது போட வேண்டும் என்று சிந்தித்து போ வே ண்டும்.

மனம்தான் மனித வாழ்க்கையின் விளை நிலம்.

மனமெனும் பெண்ணே!வாழி நீ கேளாய்!
ஒன்றையே பற்றி யூச லாடுவாய்
அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை நழுவுவாய்
விட்டுவி டென்றதை விடாது போய் விழுவாய்

தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்
புதியது காணிற் புலனழிந் திடுவாய்
புதியது விரும்புவாய் புதியதை அஞ்சுவாய்;
அடிக்கடி மதுவினை ம ணு கிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்

பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமை காணோமெனப் பொருமுவாய்,சீச்சீ!
பிணத்தினை விரும்புங் காக்கையே போல
அழுகுதல்,சாதல்,அஞ்சுதல் முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததில் இசைவாய்

அங்ஙனே,
என்னிடத் தென்றும் மாறுத லில்லா
அன்புகொண் டிருப்பாய், ஆவிகாத் திடுவாய்,
கண்ணினோர் கண்ணாய், காதின் காதாய்ப்
புலன்புலப் படுத்தும் புலனா மென்னை

உலக உருளையில் ஒட்டுற வகுப்பாய்
இன்பெலாந் தருவாய் இன்பத்து மயங்குவாய்,
இன்பமே நாடியெண் ணிலாப்பிழை செய்வாய்,
இன்பங் காத்துத் துன்பமே யழிப்பாய்
இன்பமென் றெண்ணித் துன்பத்து வீழ்வாய்,

தன்னை யறியாய், சகத்தெலாந் தொலைப்பாய்,
தன்பின் னிற்குந் தனிப்பபரம் பொருளைக்
காணவே வருந்துவாய் காணெனிற் காணாய்,
சகத்தின் விதிகளைத் தனித்தனி அறிவாய்,
பொதுநிலை அறியாய் பொருளையும் காணாய்.

மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!
நின்னொடு வாழும் நெறியுநன் கறிந்திடேன்;
இத்தனை நாட்போல் இனியுநின் னின்பமே
விரும்புவன்;நின்னை மேம்படுத் திடவே
முயற்சிகள் புரிவேன்;முத்தியுந் தேடுவேன்;

உன்விழிப் படாமல் என் விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்தனக் கின்பம் ஓங்கிடச் செய்வேன்.

- என்னிடத்து என்றும் மாறுதலில்லா அன்பு கொண்டிருப்பாய்,
- ஆவி காத்திடுவாய்
- கண்ணிணோர் கண்ணாய்,
- காதின் காதாய்ப்
    - புலன் புலப்படுத்தும் புலனாய்
    - என்னை உலக உருளையில் ஒட்டுற வகுப்பாய்'
- இன்பம் எல்லாம் தருவாய்,
- இன்பத்து மயங்குவாய்,
- இன்பமே நாடி எண்ணிலாப் பிழை செய்வாய்
- இன்பம் காத்துத் துன்பமே அழிப்பாய்
- இன்பம் என்று எண்ணித் துன்பத்து வீழ்வாய்
- தன்னை அறியாய் சகத்தெலாந் தொளைப்பாய்,
- பின்னிற்கும் தனிப் பரம்பொருளைக்
- காணவே வருந்துவாய்,
- காண் எனில் காணாய்,
- சகத்தின் விதிகளைத் தனித் தனி அறிவாய்,
- பொது நிலை அறியாய்,
- பொருளையுங் காணாய்,
- மனமெனும் பெண்ணே!
    - வாழி நீ கேளாய்!
- நின்னொடு வாழும் நெறியும் நன்கு அறிந்திடேன்;
- இத்தனை நாட்போல இனியும் நின்னின்பமே விரும்புவன்;
- நின்னை மேம்படுத்திடவே முயற்சிகள் புரிவேன்;
- முத்தியும் தேடுவேன்
- உன் விழிப்படாமல் என் விழிப்பட்ட
- சிவம் எனும் பொருளைத் தினமும் போற்றி
- உன்றனக்கு இன்பம் ஓங்கிடச் செய்வேன்.

## மனமே எல்லாம்: வேதாத்திரியம்

"மனம், அறிவு, ஆதியெனும் மூன்றும் ஒன்றே
  மறைகளெல்லாம் விரித்துணர்த்தும் உண்மை ஈதே
மனம் வடிவாய்க் குணங்களாய் எல்லைகட்டும்
  மதிஉயர்ந்த சிறப்பில் இந்த விலங்கை நீக்கி
மனத்தினது ஆதிநிலை யறிய நாடும்
  மனிதனிடம் இச்சிறப்பே பிறவி நோக்கம்
மனம்விரிந்தோ ஒடுங்கியோ தன் முனைப்பு அற்றால்
  மறைமுடிவாம் ஆதியாம் மூன்றும் ஒன்றே" (ஞாக.பா.1175)

.

## மனம் என்னும் புதினம் : வேதாத்திரியம்

மனம் எனும் ஒரு புதினப் பொருளில் பேரியக்க மண்டலத்தின் சிறப்புகள் அனைத்தும் அதன் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் சுருங்கியுள்ளன.

எனவே மனித மனம் தன்னைச் சிறுமைப் பொருளாக நினைத்தால் அது சிறியது. தனது மூல நிலையான பிரம்மத்திலிருந்து அதன் பரிணாமச் சிறப்புகள் அனைத்தையும் நினைந்து, தனது மதிப்பை உணரும் போது, அது மிகப் பெரிய தத்துவமாக இருக்கிறது.

பிரம்ம நிலையில் இருப்பாக இருந்த பூரணம், விரைவு, அறிவு என்ற மூன்று தன்மைகளும், அதன் இயக்கச் சிறப்புகளான - பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறம் ஆகிய திறன்களும் இப்போது மனித உடலுக்குள் அமைந்து, விரிந்து, நிறைந்து ஆற்றும் சிறப்புகளையும் உணரும் போது, மனித மனத்தின் பூரண தத்துவம் விளங்குகின்றது.

மனம் தன்னைப் பற்றி உணரும் அளவே அதன் மதிப்பு ஆகும். மனம் கொடுக்கும் மதிப்பேதான் - மதிப்பின் அளவே தான் - பேரியக்க மண்டலம்.

இவ்வாறு மனம் விரிந்து முழுமை பெறும் போது தான், அது தன் இருப்பு நிலையான பிரம்மத்தையும், இயக்க அலையான மனதையும் ஒன்றாகக் காணுகின்றது.
இந்தப் பெரும்பேறான அகக் காட்சியே "பிரம்ம ஞானம்" ஆகும்.
உயிரினத் தோற்றங்களின் இறுதிப் பயனே, மனித மனத்தின் மூலம்

தனது முழுமையை அறிவதே ஆகும்.

## 10.நான் வீழ்வே னென்று நினைத்தாயோ

ரோஜாச்செடியில் முள்ளிருப்பதை கண்டு கோபப்படாமல் முள்ளில் ரோஜா மலர்வதைக் கண்டு ஆனந்தப்படுங்கள்.

முட்கள் மத்தியில் தான் ரோஜா மலர் இருக்கிறது. ஆனால் அது முட்களை கவனிக்காமல் மனிதர்களை திரும்பிப் பார்க்க வைக்கிறது.

அது போல் தான் நம்முடைய வாழ்க்கையிலும் சாதனை பயணத்தின் போது பல முட்கள் இருக்கத்தான் செய்யும். முட்களைப் பார்ப்பதை தவிர்த்து விட்டு செல்ல வேண்டும்.

எவ்வளவு பெரிய பிரச்னைகளையும் மனிதன் துணை கொண்டு சமாளிக்க முடியும். தீர்க்க முடியாததை சகித்துத் தீர்வுக் கொள்ளத்தான் வேண்டும். அதன் மூலம் நாமும் சந்தோஷப்படுத்த முடியும்.

எதையாவது நல்லமுறையில் செய்ய முடியுமென்றால் அதை உடனே செய்யத் தொடங்கி விடுங்கள். அதை முழுமையாகச் செய்து முடிக்க முடியாமல் போனாலும் பரவாயில்லை. மற்றவர்கள் அதைச் செய்து முடிப்பார்கள்.

வாழ்க்கை முழுவதும் தேடல் பிரான்ஸ் நாட்டு ராணுவ வீரராக வாழ்வைத் தொடங்கி சரித்திரத்தில் நீங்கா இடம் பிடித்த நெப்போலி யனைப் பார்த்து ஒருவர் வாய்ப்புக்கிடைத்தால் மேலும் பல நாடுகளை வெற்றிகொள்வீர்களா?. என்று வினவினார்.

அதற்கு நெப்போலியன் “வாய்ப்பா?.... அதனை நான் அல்லவா உண்டாக்குகிறேன்!' என்று பதிலளித்தார்.

சாதனை படைக்க விரும்புகிறவர்கள் வாய்ப்புகளை தேட வேண்டும். ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் தேடல் அவசியம்.

இந்த உலகில் வாழும் மனிதன் வாழ்க்கையில் கடைசி வரையிலும் தேடல் இருக்க வேண்டும். தேடல் மத்தியில் தான் சாதனை படைக்க முடியும்.

எனக்கு மட்டும் வாய்ப்பு கிடைத்திருந்தால் வானத்தை வில்லாக வளைத்திருப்பேன். மணலை கயிறாக திரித்திருப்பேன் என பேசுவது திறமையின்மை. வாழ்க்கையில் வெற்றிப்பெற வாய்ப்புகளை உருவாக்கி கொள்ள வேண்டும்.

போராடினால் தான் வெற்றி பெற முடியும். நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றதற்கான அனைத்து தகுதிகளும் பெற்று விட்டாலும் இந்த உலகத்தில் சில நேரங்களில் சில மனிதர்களால் புறக்கணிக்கப்படதான் செய்வீர்கள்.

அதற்கு பெயர் தோல்வி அல்ல. உங்கள் வெற்றியை, மகிழ்ச்சியை அவர்களால் தாங்கி கொள்ள முடியவில்லை என்று தான் அர்த்தம்.

எந்த இடத்தில் எப்போது உங்கள் வாழ்க்கையில் நீங்கள் புறக்கணிக்கப் படுகிறீர்களோ அப்போதே நீங்கள் வெற்றியாளர்கள்.

எச்சரிக்கை உணர்வு, வெற்றி என்பது நாம் வாழ்க்கையில் எவ்வளவு உயரம் போகிறோம் என்பதில் இல்லை. ஒவ்வொரு முறை விழும் போதும் எவ்வளவு வேகமாக எழுகிறோம் என்பதில் இருக்கிறது.

திறமையும் வலிமையும் உள்ள ஒருவனுக்கு விழாமல் இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு பிறரை விட அதிகமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு வெற்றி மாளிகையும் தோல்வித் தூண்களின்மேல் கட்டப்பட்டுள்ளன. மாளிகை வலிமையாக நிற்க வேண்டும் என்றால் தூண்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது அவசியம்.

அதுபோல் தான் வாழ்க்கையில் தோல்விகளையே சந்தித்து வருகிறீர்களா, வெற்றியின் உச்சிக்கு சென்று கொண்டிருக்கிறீர்கள் என நினைத்து கொள்ளுங்கள்.

வாழ்க்கை வாழ்வதற்கே நாளை வரக்கூடிய துன்பங்களைப்பற்றி அஞ்சிக் கவலைப்பட்டு நேரத்தை வீணாக்கி கொண்டிராமல்

இன்றுள்ள சாதகமான சூழ்நிலையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்பவனே வெற்றியை நோக்கிச் செல்கிறான்.

தோல்விகளால் துவளாமல் உரம் பெற்று அதிக உழைப்பாலும் உறுதியாலும், தோல்விகளை வெற்றிகளாக மாற்றி "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற எண்ணத்துடன் வாழ்க்கையை மென்மேலும் சிறப்பானதாக்கிக் கொள்பவனே வெற்றியாளனாகக் கருதப்படுவான்.

வெல்ல முடியாத சூழ்நிலைகளாகத் தென்படுவதெல்லாம் உண்மையில் வெற்றிக்கான வாய்ப்புகளே.

சாதனையை நோக்கி வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களின் சரித்திரங்களை புரட்டிப் பார்த்தால் அவர்கள் குறிக்கோளைப் பொறுத்தவரை குழப்பமில்லாமல் இருப்பார்கள்.

அவர்களின் கண்களுக்கு தெரிந்ததெல்லாம் ஒரே ஒரு குறிக்கோளாகதான் இருந்திருக்கும்.

அதை நோக்கித் தான் பயணமும் உழைப்பும் முயற்சியும் செய்து இருப்பார்கள்.

எந்த பிரச்னை வந்தாலும் மலைத்துவிடக் கூடாது. தைரியம் உள்ள இடத்தில் பயம் நுழையாது. பய உணர்வோடு வருங்காலத்தை எதிர்கொள்ளக் கூடாது. இன்றைய கால கட்டத்தில் சாதனை படைப்பதற்கு சோதனைகளை மேற்கொள்ள தான் வேண்டும்.

வாழ்க்கையில் எதிர் நீச்சல் அடித்தால் தான் வெற்றி கொள்ள முடியும். இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதருக்கும் போராட்டங்கள் உண்டு.

போராட்டங்களை பார்த்து பயந்து விடாமல் தைரியத்தையும் தன்னம்பிக்கையும் வளர்த்து கொள்ள வேண்டும். வெற்றி என்பதை நோக்கி முன்னேறுகிறவர்கள் அனைவருமே சாதனை படைத்தவர்கள் தான்.

தேடிச் சோறு நிதந் தின்று
பல சின்னஞ் சிறு கதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிக உழன்று

பிறர் வாடப் பல செயல்கள் செய்து
நரை கூடிக் கிழப்பருவம் எய்தி
கொடுங் கூற்றுக் கிரை யெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வே னென்று நினைத்தாயோ? (பாரதியார்)

## பிறப்பின் நோக்கம் அறிந்து வாழ வேண்டும் - வேதாத்திரியம்

ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதன் வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும்.

இயற்கையின் முழுமையை உணர வேண்டும், எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றி, வந்து இயங்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுதான் பிறப்பின் நோக்கம். (This and this alone is the purpose of life).

சுருங்கச் சொன்னால் இயற்கையானது பல படித்தளமான பரிணாம இயக்கத்திலே தோற்றங்களாகி, ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவு வரையிலே வந்து மனிதனாகி, தன்னுடைய மதிப்பையும், தன்னுடைய தகைமையையும், தன்னுடைய அழகையும் ரசிக்கவும், உணரவும் அந்த இயற்கையே எடுத்துக் கொண்ட ஒரு உன்னதமான வடிவம் எதுவோ அதுதான் மனிதன்.

மனிதனில் தான் அறிவினுடைய முழுமையைப் பெற முடியும். பழக்கத்தின் வழியே நாம் சிக்கி, தேவை, பழக்கம், சூழ்நிலையின் கட்டாயம் (நிர்பந்தம்). இந்த மூன்றினாலும் உந்தப்பட்டுச் செயல் செய்து கொண்டிருக்கிறோம்.

இவற்றிலிருந்து விளக்கம் பெற்று, விளக்கத்தின் வழியே நாம் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமானால் உடனடியாக விளக்கம் வராது, பழக்கத்திலிருந்து உடனடியாக மாறி விடவும் முடியாது. முறையான பயிற்சி வேண்டும்.

விளக்கத்திலேயும் பயிற்சி வேண்டும். அப்படி விளங்கிக் கொண்ட பிறகு நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போக வேண்டும், அதிலுள்ள வேறுபாடு, தூரம் என்ன என்பதைக் கண்டு, படிப்படியாகத் தன்னை மாற்றி உயர்த்தி அந்த இடத்தை அடைய வேண்டும். வாழ்க வளமுடன்.

# துணைநின்ற நூல்கள்.

1. பாரதியார் பாடல்கள், உமா பதிப்பகம், சென்னை.

2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. இணையதள தகவல்கள்.
4. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. ஞாலம் போற்றும் ஞானிகள், மன்னார்குடி பானுகுமார், விஜய பதிப்பகம், கோவை
7. பாரதியார் பாடல்கள், பாரதியார் இணையதளம்
8. ஜென் கதைகள், இணையதளம்